ஞானேஷ் குமாரை நீக்கக் கோரி பேரணி: பல இடங்களில் காங்கிரஸார் கைது

போலீஸாருடன் மோதல்

புது தில்லி, செப். 25: எஸ்ஐஆர் விவகாரத்தில், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை உடனடியாகப் பதவி நீக்குவதுடன், அவரைக் கைதுசெய்யவும் வலியுறுத்தி, மாநில தலைநகரங்களில் உள்ள தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகங்களை நோக்கி காங்கிரஸார் வெள்ளிக்கிழமை பேரணி நடத்தினர்.

பல இடங்களில் தடுப்புகளை மீறி செல்ல முயன்ற காங்கிரஸாருக்கும், காவல் துறையினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. தண்ணீரைப் பீய்ச்சியடித்தும், கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசியும் போராட்டக்காரர்களை காவல் துறையினர் விரட்டினர். காங்கிரஸ் மூத்த தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

அஸ்ஸாம் மாநிலம் குவாஹாட்டியில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாருக்கு எதிராக மாநில காங்கிரஸ் தலைவர் கௌரவ் கோகோய் தலைமையில் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்திய அக்கட்சியினர்.

எதிர்க்கட்சிகள் போர்க்கொடி: வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) தொடர்பான பல்வேறு முடிவுகளில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கும், தேர்தல் ஆணையர்கள் சுக்பீர் சிங் சாந்து, விவேக் ஜோஷி ஆகியோருக்கும் இடையே தீவிர கருத்து மோதல் ஏற்பட்டுள்ளதாக ஆங்கில நாளிதழ் ஒன்றில் கடந்த புதன்கிழமை செய்தி வெளியானது.

வாக்காளர்கள் மொத்தமாக நீக்கம், படிவம் 6-இல் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள், தரவு தளத்தை மையப்படுத்துதல் தொடர்பான கட்டுப்பாடு உள்ளிட்ட விஷயங்களுக்கு தேர்தல் ஆணையர்கள் எதிர்ப்பை பதிவு செய்தாதகவும், தங்களுக்கு தெரியாமல் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டதாக கடந்த 10 மாதங்களில் குறைந்தபட்சம் 14 முறை ஆட்சேபம் தெரிவித்ததாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த விவகாரம் அரசியல் ரீதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள சூழலில், ஞானேஷ் குமாருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் போர்க்கொடி உயர்த்தியுள்ளன.

காங்கிரஸ் பேரணி: 'தேச துரோக குற்றத்துக்காக, ஞானேஷ் குமாரை உடனடியாகப் பதவி நீக்குவதுடன், அவரைக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்; அவர் மேற்கொண்ட முடிவுகள் குறித்து சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும்' என வலியுறுத்தி, தில்லியில் உள்ள தேர்தல் ஆணைய அலுவலகம் மற்றும் மாநில தலைநகரங்களில் உள்ள தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலங்கள் நோக்கி காங்கிரஸ் சார்பில் வெள்ளிக்கிழமை பேரணி நடத்தப்பட்டது.

உத்தர பிரதேசம், பிகார், மேற்கு வங்கம், ஒடிஸா, பஞ்சாப், அஸ்ஸாம் உள்ளிட்ட மாநிலங்களின் தலைநகரங்களில் இப்போராட்டம் நடத்தப்பட்டது.

கௌரவ் கோகோய், மூத்த தலைவர்கள் கைது: அஸ்ஸாம் தலைநகர் குவாஹாட்டியில் காங்கிரஸ் தலைமையகத்தில் இருந்து தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகம் நோக்கி தடுப்புகளை மீறி செல்ல முயன்ற கட்சியின் மாநிலத் தலைவர் கௌரவ் கோகோய் மற்றும் மூத்த தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். ஒடிஸா தலைநகர் புவனேசுவரத்தில் பேரணியை தடுத்து நிறுத்தியதால் காவல் துறையினருடன் காங்கிரஸார் மோதலில் ஈடுபட்டனர்.

மணிப்பூரில் தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகம் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட காங்கிரஸார், ஞானேஷ் குமாரின் உருவபொம்மையை எரித்தனர்.

இதையடுத்து, கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசி, காங்கிரஸாரை காவல் துறையினர் விரட்டியடித்தனர். பிற மாநிலங்களிலும் தடுப்புகளை மீறி செல்ல முயன்ற காங்கிரஸ் மூத்த தலைவர்கள் மற்றும் கட்சியினர் கைதாகினர்.

தேர்தல் ஆணையத்தின் தெளிவான விளக்கம் வேண்டும்: பாஜக கூட்டணி கட்சிகள் வலியுறுத்தல்

எஸ்ஐஆர் தொடர்பான முடிவுகளுக்கு இரு தேர்தல் ஆணையர்கள் ஆட்சேபம் தெரிவித்ததாக வெளியான தகவல்கள் குறித்து தேர்தல் ஆணையம் உடனடியாக தெளிவான விளக்கத்தை அளிக்க வேண்டும் என்று பாஜக கூட்டணியைச் சேர்ந்த லோக் ஜனசக்தி (ராம் விலாஸ்), தெலுங்கு தேசம், ராஷ்ட்ரீய லோக்தளம் ஆகிய கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

லோக் ஜனசக்தி (ராம் விலாஸ்) கட்சித் தலைவரும், மத்திய அமைச்சருமான சிராக் பாஸ்வான் கூறுகையில், 'நான் எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளை ஆதரிக்கவில்லை. அதேநேரம், மக்கள் மத்தியில் எழுந்துள்ள சந்தேகங்களுக்கு தேர்தல் ஆணையம் தெளிவான விளக்கத்தை அளிக்க வேண்டியுள்ளது' என்றார்.

ராஷ்ட்ரீய லோக் தளம் கட்சித் தலைவர் உபேந்திர குஷ்வாஹா, தெலுங்கு தேசம் மூத்த தலைவர் ஸ்ரீகிருஷ்ண தேவராயலு உள்ளிட்டோரும் இதே கருத்துகளை எதிரொலித்துள்ளனர்.

பாஜக தொடர்ந்து ஆட்சிக்கு வருவது எப்படி?

ராகுல் விமர்சனத்துக்கு நிதின் நபின் விளக்கம்

ஜெய்ப்பூர், செப். 25: 'மக்களுக்கு சேவை செய்வதன் மூலமும், அவர்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதன் மூலமும் பாஜக மத்தியில் தொடர்ந்து ஆட்சிக்கு வருகிறது' என்று பாஜக தேசியத் தலைவர் நிதின் நபின் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி விமர்சனத்துக்கு பதிலளிக்கும் வகையில், இக் கருத்தை அவர் தெரிவித்தார்.

தில்லியில் வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், 'இந்த முறை 400 மக்களவைத் தொகுதிகளுக்கு மேல் வெற்றி' என்று பிரதமர் மோடி முழக்கம் எழுப்பும் விடியோ மற்றும் '30 ஆண்டுகளுக்கு மத்தியில் பாஜக ஆட்சிதான்' என்று அமித் ஷா கூறும் விடியோவையும் ஒளிபரப்பிய ராகுல் காந்தி, 'ஜனநாயக சூழலில் செயல்படும் எந்தவொரு அரசியல் தலைவரும் இத்தகைய கருத்துகளைக் கூற முடியாது' என்றார்.

இந்த நிலையில், ராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற நிதின் நபினிடம், ராகுல் கருத்து குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த அவர், 'மத்தியில் பாஜக தொடர்ந்து ஆட்சிக்கு வருவதையும், அடுத்த 25 ஆண்டுகள் மக்களுக்கு பாஜக சேவை செய்யும் என்று பாஜக தலைவர்கள் நம்பிக்கை தெரிவிப்பதையும் விமர்சித்துள்ளார்.

மக்களுக்கு சேவை செய்வதிலிருந்தே, பாஜகவுக்கு இந்த நம்பிக்கை வருகிறது. மக்களுக்கு சேவை செய்வதன் மூலமும், அவர்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதன் மூலமும் பாஜக மத்தியில் தொடர்ந்து ஆட்சிக்கு வருகிறது என்றார்.

ஞானேஷ் குமார் மீது குற்றவியல் நடவடிக்கை கோரி உச்சநீதிமன்றத்தில் மனு

புது தில்லி, செப். 25: வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆர்) பணியில் சட்டரீதியான கடமைகளை மீறியதாகக் கூறப்படும் விவகாரத்தில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிடக் கோரி உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்றத்தில் வழக்குரைஞர் சைலேந்திர மணி திரிபாதி சார்பில் வெள்ளிக்கிழமை மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதில், எஸ்ஐஆர் விவகாரத்தில் இரு தேர்தல் ஆணையர்களுக்குத் தெரியாமல், முடிவுகள், வழிகாட்டுதல்கள் மற்றும் மென்பொருள் மாற்றங்களை ஞானேஷ் குமார் மேற்கொண்டது அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது, செல்லாது என அறிவிக்க வேண்டும்.

எஸ்ஐஆர் தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவுகள் அனைத்தும் சட்டவிரோதமானவை என அறிவிப்பதுடன், புதிய வாக்காளர்களுக்கான படிவம் 6-இல் மேற்கொண்ட மாற்றங்களை ரத்து செய்து பழைய அசல் படிவத்தை நடைமுறைக்கு கொண்டுவர உத்தரவிட வேண்டும்.

எஸ்ஐஆர் மூலம் நாடு முழுவதும் 13 கோடி வாக்காளர்கள் நீக்கப்பட்டது தொடர்பாக சிறப்புப் புலனாய்வுக் குழு (எஸ்ஐடி) அமைத்து விசாரிக்க வேண்டும்.

இந்த விவகாரத்தில் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழான கடமைகளை மீறி செயல்பட்டதற்காக ஞானேஷ் குமார், துணை தேர்தல் ஆணையர் மனீஷ் கர்க், தேர்தல் ஆணைய தகவல் தொழில்நுட்பப் பிரிவு தலைவர் சீமா கன்னா ஆகியோர் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட வேண்டும் எனக் கோரியுள்ளார்.

அமெரிக்க புவி இயற்பியல் சங்க விருதுக்கு 4 இந்திய விஞ்ஞானிகள் தேர்வு

வாஷிங்டன், செப்.25: அமெரிக்க புவி இயற்பியல் சங்க (ஏஜியு) விருதுக்கு 4 இந்திய விஞ்ஞானிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மேம்பட்ட புவி, விண்வெளி அறிவியல் துறைகளில் ஆராய்ச்சி, கல்வி, புத்தாக்கம் ஆகியவற்றில் சிறந்து விளங்கியதற்காகவும், தலைமைத்துவ பண்பை வெளிப்படுத்தியதற்காகவும் 2026-ஆம் ஆண்டுக்கான விருதுக்கு ராக்சி மேத்யூ கோல், நீலிமா சத்யம் ஆகிய இருவரையும் ஏஜியூ அமைப்பு தேர்வு செய்துள்ளது. இதில் ராக்சி மேத்யூ கோல், புணேயை தலைமையிடமாகக் கொண்ட இந்திய வெப்ப மண்டல ஆய்வு மையத்தில் பருவநிலை விஞ்ஞானியாக உள்ளார். அவர் ஏற்கெனவே ராஷ்ட்ரீய விஞ்ஞான் புரஸ்கார் விருது பெற்றுள்ளார்.

தற்போது அவரை பவெல் எஸ். மால்சனோவ் கம்யூனிகேஷன்ஸ் விருதுக்கு ஏஜியூ அமைப்பு தேர்வு செய்துள்ளது.

இந்திய பெருங்கடலில் வெப்பம் அதிகரிப்பு, அதனால் பருவமழையில் ஏற்படும் மாற்றங்கள், கடல்சார் வெப்ப அலை, சூறாவளிகள், தீவிர மழைப்பொழிவு, தெற்காசியாவில் உள்ள மக்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரங்களில் ஏற்படும் தாக்கங்களைப் பதிவு செய்ததற்காக இந்த விருதுக்கு அவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு விருதுடன் 25,000 அமெரிக்க டாலர்கள் பரிசாக வழங்கப்படும். இந்த விருது ஆண்டுதோறும் பருவநிலை மாற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்வோருக்கு வழங்கப்படுவது வழக்கம்.

மற்றொரு விஞ்ஞானியான நீலிமா சத்யம், இந்தூர் ஐஐடியில் பேராசிரியராக உள்ளார். அவர் ஏஜியூ அமைப்பால் தேவேந்திர லால் நினைவு விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். அந்த விருது, ஆண்டுதோறும் பூமி மற்றும் விண்வெளி அறிவியல் குறித்து ஆய்வு செய்யும் இடைக்கால அல்லது ஆரம்பநிலை விஞ்ஞானிக்கு வழங்கப்படுவது வழக்கம்.

இதேபோல், அமெரிக்க வாழ் இந்திய விஞ்ஞானிகளான அப்துல் காதிர், பைசல் ஹொசைன் ஆகியோர் சைன்ஸ் ஆப் சொல்யூசன்ஸ் விருதுக்கும், அம்பாசிடர் விருதுக்கும் முறையே தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில் காதிர், மேரிலாண்ட் பல்கலைக்கழகத்தில் உதவி ஆராய்ச்சி பேராசிரியராக உள்ளார். ஹொசைன், வாஷிங்டன் சியாட்டில் பல்கலைக்கழகப் பேராசிரியராக பணிபுரிகிறார். அவர் பனாரஸ் பல்கலைக்கழக முன்னாள் மாணவர் ஆவார்.

வெளிநாட்டு மாணவர் விசா விதிகளை கடுமையாக்கியது ஆஸ்திரேலியா

குடும்பத்தினரை அழைத்துச் செல்ல முடியாது

சிட்னி, செப்.25: தங்களது நாட்டில் குடியேறுபவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் நோக்கில், வெளிநாட்டு மாணவர் மற்றும் தற்காலிக பட்டதாரிகளுக்கான நுழைவு இசைவு (விசா) விதிகளை ஆஸ்திரேலியா கடுமையாக்கியுள்ளது.

அதன்படி, மாணவர் மற்றும் தற்காலிக பட்டதாரி விசாவின் கீழ் தங்களது குடும்பத்தினரை (வாழ்க்கைத் துணை, குழந்தைகள்) உடன் அழைத்துச் செல்லும் வாய்ப்பு சில விதிவிலக்குகளுடன் நீக்கப்படுவதாக, அந்நாட்டின் உள்துறை அமைச்சர் டோனி பர்க் அறிவித்தார்.

கல்வி-வேலைக்காக ஆஸ்திரேலியாவுக்கு வரும் முதல் ஐந்து வெளிநாட்டவர்களில் இந்தியர்களும் இடம்பெற்றுள்ளனர். இந்நாட்டின் மக்கள்தொகையில் கிட்டத்தட்ட 3.4 சதவீதம் இந்தியர்களாவர். எனவே, ஆஸ்திரேலிய அரசின் அறிவிப்பால் இந்திய மாணவர்கள் - குடும்பத்தினர் அதிகம் பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது.

தொழில்முறை படிப்புகளில் உயர்கல்வி பயில்வதற்காக இந்தியர்கள் அதிகம் தேர்வு செய்யும் நாடுகளில் ஒன்றாக ஆஸ்திரேலியா உள்ளது.

குறிப்பாக மேற்கு ஆஸ்திரேலிய மாகாண உயர்கல்வி நிலையங்களில் அதிக இந்திய மாணவர்கள் சேர்கின்றனர்.

கடந்த 2025 நிலவரப்படி, மேற்கு பகுதி கல்வி நிலையங்களில் பயிலும் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 11,954 ஆகும். அதேநேரம், கடந்த சில ஆண்டுகளாகவே இந்திய மாணவர்களுக்கான விசா எண்ணிக்கையை ஆஸ்திரேலியா தொடர்ந்து குறைத்து வருகிறது.

கடந்த 2022-23-இல் 1,02,696 மாணவர்களுக்கு விசா வழங்கப்பட்ட நிலையில், 2023-24-இல் 50,516-ஆகவும், 2025-26-இல் 33,827-ஆகவும் குறைந்தது.

இந்தச் சூழலில், மாணவர் மற்றும் தற்காலிக பட்டதாரிகளுக்கான விசா விதிமுறைகளை ஆஸ்திரேலியா கடுமையாக்கியுள்ளது. அதன்படி, ஆஸ்திரேலியாவுக்கு கல்வி பயில வரும் வெளிநாட்டு மாணவர்கள், தங்களை சார்ந்திருப்பவர்களாகக் குறிப்பிட்டு, வாழ்க்கைத் துணை மற்றும் குழந்தைகளை உடன் அழைத்துச் செல்லும் வாய்ப்பு நீக்கப்படுவதாக உள்துறை அமைச்சர் டோனி பர்க் அறிவித்தார்.

ஆஸ்திரேலியாவில் ஏற்கெனவே தங்கியுள்ள மாணவர்களுக்கு இது பொருந்தாது; ஆசியான் மற்றும் பசிபிக் நாடுகளின் மாணவர்களுக்கும் விதிவிலக்கு அளிக்கப்படுகிறது.

பிஹெச்டி உள்ளிட்ட குறிப்பிட்ட சில படிப்புகளுக்கும் விதிவிலக்கு உண்டு என்று அவர் தெரிவித்தார்.

இதேபோல், ஆஸ்திரேலியாவில் தொடர்ந்து தங்கியிருக்கும் நோக்கில், தற்காலிக பட்டதாரி விசாவை பயன்படுத்துவதைத் தடுக்க அதற்கான விதிமுறைகளும் கடுமையாக்கப்பட்டுள்ளதாக டோனி பர்க் தெரிவித்தார்.

எனினும், புதிய விதிமுறைகள் எப்போது அமலாகும் என்ற விவரத்தை அவர் தெரிவிக்கவில்லை.

மாண்புமிகு கடன் மீட்பு
தீர்ப்பாயம்-III சென்னை முன்னிலையில்
T.A.எண். 3/2026

யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா
(IFSC குறியீடு: UBIN0901229) (முன்னர் M/s.Corporation Bank)
கார்ப்பரேட் வங்கிப் பிரிவு, பிரதிநிதியாக அதன்
முதன்மை மேலாளர்,
ஓயிட்ஸ் சாலை கிளை, 38 & 39, ஓயிட்ஸ் சாலை,
சென்னை - 600 014 ...மனுதாரர்

-எதிர்-

1. M/s. Prime Print Services, (PAN எண். AAIFP6248B)
பிரதிநிதியாக அதன் உரிமையாளர்,
பழைய எண்.21-A, புதிய எண்.49, 2வது தளம்,
லாங்ஸ் கார்டன் சாலை, சித்ரா தியேட்டர் சாலை,
புதுப்பேட்டை, சென்னை - 600 002.
மேலும்: எண்.116, E.H. சாலை, சர்மா நகர்,
வியாசர்பாடி, சென்னை - 600 039.
2. திரு. S.சுப்ரமணியம், த/பெ Late. A.K.சுவாமி
கதவு எண்.25B/B, பிளாக் எண். S-2, ராமதாசர் சாலை,
பராசக்தி நகர், திருவேற்காடு, பூந்தமல்லி, சென்னை - 600 077.
3. திரு. S.சரவணகுமார்,
கதவு எண்.25B/B, பிளாக் எண். S-2, ராமதாசர் சாலை,
பராசக்தி நகர், திருவேற்காடு, பூந்தமல்லி,
சென்னை - 600 077. ...பிரதிவாதிகள்

பெறுநர்
1. M/s. Prime Print Services, (PAN எண். AAIFP6248B)
பிரதிநிதியாக அதன் உரிமையாளர்,
பழைய எண்.21-A, புதிய எண்.49, 2வது தளம்,
லாங்ஸ் கார்டன் சாலை, சித்ரா தியேட்டர் சாலை,
புதுப்பேட்டை, சென்னை - 600 002.
மேலும்: எண்.116, E.H. சாலை, சர்மா நகர்,
வியாசர்பாடி, சென்னை - 600 039.

யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா மேற்கூறிய (T A) மாற்று விண்ணப்பம் எண்.3/2026- இல் குறிப்பிட்டுள்ள கடன் மீட்பு தொகையான ரூ.35,49,358.29 வசூலிக்கும் பொருட்டு மனுவைத் தாக்கல் செய்துள்ளது. சென்னை, கடன் மீட்புத் தீர்ப்பாயம்-III - இன் பதிவாளர் முன்னிலையில் 18.08.2026 அன்று விசாரணைக்கு வந்தது; எனவே தாங்கள் **15.10.2026-க்குள்** பதிலளிக்கப்பட வேண்டிய வகையில், மாற்று சேவை மூலமாக (substituted service) உங்களுக்கு அறிவிப்பாணை அனுப்ப மாண்புமிகு தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

15.10.2026 அன்று காலை 11.30 மணிக்கு, சென்னை, மாண்புமிகு கடன் மீட்பு தீர்ப்பாயம் - III முன்பு நீங்கள் நேரில் அல்லது உங்கள் வழக்கறிஞர் வாயிலாக ஆஜராக வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்; தவறும் பட்சத்தில், (நீங்கள் இல்லாத நிலையில்) இவ்வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும்.

M/s. தீபா ஹரிகோவிந்த்
வழக்கறிஞர்
II தளம், எண்.306 (பழைய எண்.169),
லிங்கி செட்டி தெரு, சென்னை - 600 001.

சென்னை மாண்புமிகு கடன்கள் மீட்பு
தீர்ப்பாயம் - II, முன்பாக
O.A. No. 321 OF 2025

ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா,
சில்லறை சொத்துக்கள் மத்திய செயலாக்க மையம் **(RACPC)** எண்.16, வேனெல்ஸ் சாலை, எழும்பூர், சென்னை-600 008.
பிரதிநிதியாக அதன் துணை மேலாளர், திரு. S. மித்ரா
...வாதி

-எதிர்-

1. திருமதி பிரிசில்லா. D,
W/o. டென்னிஸ்
17/15, மணலி நியூ டவுன் இடையஞ்சாவடி,
திருவள்ளூர்-600103.
2. திரு.மேஷக் மனோவசம்ராஜ்.D
S/o டென்னிஸ்
17/15, மணலி நியூ டவுன் இடையஞ்சாவடி,
திருவள்ளூர்-600103.
... பிரதிவாதி

அறிவிப்பு

எழும்பூர், பாரத ஸ்டேட் வங்கி, சில்லறை சொத்துக்கள் மத்திய செயலாக்க மையம் (RACPC) தாக்கல் செய்த **O.A.எண் 321/2025,** மாண்புமிகு பதிவாளர், DRT-II, சென்னை அவர்கள் முன்பாக **09.09.2026** அன்று விசாரணைக்கு வந்தது என்பதையும், மாண்புமிகு தீர்ப்பாயம் அந்த வழக்கில் உள்ள மேற்கண்ட **1 வது, 2 வது** பிரதிவாதிகளுக்கு **13.11.2026-க்குள்** பதிலளிக்குமாறு அறிவிப்பு அனுப்ப உத்தரவிட்டது என்பதையும் தயவு செய்து கவனத்தில் கொள்ளவும்.

எனவே, **13.11.2026 அன்று காலை 11.30 மணிக்கு,** நவறாமல், சென்னை 600 006, நுங்கம்பாக்கம், ஹேடோஸ் சாலை, சாஸ்திரி பவன், கூடுதல் அலுவலகக் கட்டிடம், 6வது தளம், மாண்புமிகு கடன் மீட்புத் தீர்ப்பாயம்-II முன்பு நேரில் அல்லது முறையாக அங்கீகரிக்கப்பட்ட முகவர் அல்லது வழக்கறிஞர் மூலமாக ஆஜராக தவறினால் இந்த விஷயமானது தாங்கள் இல்லாமலேயே முடிவு செய்யப்படும்

S. பாண்டுரங்கன்
விண்ணப்பதாரரின் தரப்பு வழக்கறிஞர்
245/5, ரோகிணி பிளாட்ஸ், அண்ணா நகர்
மேற்கு விரிவாக்கம்; சென்னை - 600 101.

பாரத ஸ்டேட் வங்கி
வீட்டுக் கடன் மையம்
(HLC - OMR), புதிய எண்.4/952 & 4/952A,
3 வது தளம், ராஜீவ் காந்தி சாலை, பெருங்குடி,
சென்னை - 600 096. போன்: 22250031

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

வரிசை எண்.1 கடன்தாரரின் பெயர் : திருமதி. பிரியா ஜான்சன்
வாகன பதிவு எண்: **TN 05 CU 4929**
தயாரிப்பு/மாடல் : **ZS EV EXECUTIVE**
குறைந்த பட்ச விலைரூ.10,00,000/- (GST @ 18% applicable) டேவணித்தொகை: ரூ.1,00,000/-

வரிசை எண்.2 கடன்தாரரின் பெயர் : திரு. முகமது ஹபீசர் ரஹ்மான்
வாகன பதிவு எண் : **TN 11 BR 3758**
தயாரிப்பு/மாடல் : **TATA NEXON EV CAR**
குறைந்த பட்ச விலைரூ.7,50,000/- (GST @ 18% applicable) டேவணித்தொகை: ரூ.75,000/-

வரிசை எண்.3 கடன்தாரரின் பெயர் : திருமதி. பத்மினி V
வாகன பதிவு எண் : **TN 11 BV 7225**
தயாரிப்பு/மாடல் : **MAHINDRA XUV 700 AX7 L DIESEL MT**
குறைந்த பட்ச விலைரூ.18,50,000/- (GST @ 18% applicable) டேவணித்தொகை: ரூ.1,85,000/-

வரிசை எண்.3 கடன்தாரரின் பெயர் : திருமதி. அலஹரி ரம்யா
வாகன பதிவு எண் : **TN 05 CX 3223**
தயாரிப்பு/மாடல் : **ALTROZ CREATIVE S PMT**
குறைந்த பட்ச விலைரூ.7,00,000/- (GST @ 18% applicable) டேவணித்தொகை: ரூ.70,000/-

விற்பனை விபரம்:

மின்னணு ஏலம் நடைபெறும் நாள் & நேரம்:	06.10.2026 - மாலை 03.00 மணி முதல் 04.00 மணி வரை; [illegible]
டேவணித் தொகை செலுத்தும் முறை:	EMD-ஐ டிமாண்ட் டிராப்ட் மூலமாக State Bank of India, HLC-OMR என்ற பெயரில் செலுத்த வேண்டும்.
விலைக் குறிப்பீட்டுத் தொகையை உயர்த்திக் கோரும் அளவு:	ரூ.5,000/-
வாகனங்களை பார்வையிடும் தேதி:	30.09.2026 - காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணிவரை;
டேவணித்தொகையுடன் விலைப்புள்ளிகள் சமர்ப்பிக்க:	05.10.2026 மாலை 04.00 மணி வரை;

விற்பனை தொகையில் GST (18%)-யினை வெற்றி பெற்ற விலைக்குறிப்பீட்டாளரே ஏற்கவேண்டும். மேலும் வாகனத்தினை பார்வையிடும் நேரம் / இ-ஏலம் மற்றும் இதர விபரங்களையும் நிபந்தனைகளையும் அறிய விரும்பும் விலைக் குறிப்பீட்டாளர்கள், யூ-ஸ்டார் அசோசியேட்ஸ்- 98407 92143, அவர்களை தொடர்பு கொள்ளலாம் அல்லது வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட சேவை முகவரான M/s.C1 India Pvt. Ltd. (தொடர்பு கொள்ள வேண்டிய நபர் - திருபிரபாகரன் - 7418281709) வலைத்தளம்: www.bankeauctions.com; மின்னஞ்சல்: tn@c1india.com (அல்லது) முதன்மை மேலாளர், பாரத ஸ்டேட் வங்கி, HLC-OMR, 4/952 & 4/952A, 3வது தளம், ராஜீவ் காந்தி சாலை, பெருங்குடி, சென்னை-600 096, போன்:044-2225 0031, 94458 61199 என்ற முகவரியில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம்.

இடம்: சென்னை. / தேதி: 24.09.2026 அதிகாரப்பூர்வ அதிகாரி, பாரத ஸ்டேட் வங்கி, HLC-OMR, சென்னை.

பஞ்சாப் நேஷனல் வங்கி
...the name you can BANK upon!
கடன் மீட்புத் துறை, வட்டார அலுவலகம் சென்னை
எண் 46-48, ராயப்பேட்டை நெடுஞ்சாலை,
PNB டவர்ஸ், 2வது தளம், சென்னை-600 014.

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்திற்கானது)

கீழே கையொப்பமிட்டுள்ளவர் **பஞ்சாப் நேஷனல் வங்கியின்** அதிகாரபூர்வ அதிகாரி மற்றும் முதன்மை மேலாளர், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டப் பிரிவு 13(12)-ன் கீழ் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகளில் விதி 3-ன் கீழ் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி **கடன்தாரர் / அடமானதாரர்: திரு.அரவிந்த் குமார். G. (கிளை அலுவலகம் : சௌகார்பேட்டை, D.எண்-361400),** அவர்களுக்கு அனுப்பிய **04.07.2026** தேதியிட்ட **கோரிக்கை அறிவிப்பில்** (Demand Notice) கொடுக்கப்பட்டுள்ள கடன் நிலுவைத் தொகையான **30.06.2026** அன்றுள்ளபடி **ரூ.53,69,580.49 (ரூபாய் ஐம்பத்து மூன்று லட்சத்து அறுபத்து ஒன்பதாயிரத்து ஐநூற்று எண்பது மற்றும் பைசா நாற்பத்து ஒன்பது மட்டும்)** மேலும் **01.07.2026** அன்று முதல் ஏதேனும் தொகை செலுத்தி இருப்பின் அதனை கழித்தது போக எதிர்கால வட்டி மற்றும் கட்டணங்கள் சேர்த்து அந்த அறிவிப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து செலுத்துமாறு கோரப்பட்டது. கடன்தாரர், ஜாமீன்தாரர் மற்றும் அடமானதாரர் கடன் பாக்கித்தொகையை முழுமையாக திருப்ப செலுத்தத் தவறிவிட்டபடியால் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் அறிவிப்பதாவது மேற்படி சட்டப் பிரிவு 13(4)-ன் கீழும் மற்றும் மேற்குறிப்பிட்ட பிரிவு 8 ன் கீழும் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவர், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **22.09.2026** அன்று சுவாதீனம் செய்துள்ளார்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வாய்ப்பு குறித்து சட்டப் பிரிவு 13(8) ஷரத்துக்களின்படி கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

கடன்தாரர் மற்றும் அடமானதாரருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில் சுவாதீனமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித போதும் வைத்துக்கொள்ளக்கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது **பஞ்சாப் நேஷனல் வங்கிக்கு** செலுத்தவேண்டிய **31.08.2026** அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையான **ரூ.54,06,188.49 (ரூபாய் ஐம்பத்து நான்கு லட்சத்து ஆறாயிரத்து நூற்று எண்பது எட்டு மற்றும் பைசா நாற்பத்து ஒன்பது மட்டும்)** மேலும் **01.09.2026** அன்று முதல் ஏதேனும் தொகை செலுத்தி இருப்பின் அதனை கழித்தது போக எதிர்கால வட்டி மற்றும் கட்டணங்கள் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

அசையாச் சொத்தின் விளக்கம்:

திரு.அரவிந்த் குமார்.G. அவர்களின் பெயரில் உள்ள சொத்து: சொத்தின் அட்டவணை: வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் மாதவரம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, சென்னை மாநகராட்சி எல்லைகளுக்குட்பட்ட, தண்டையார்பேட்டை வட்டம், எண்.31 கொடுங்கையூர் கிராமத்தின் பிளாக் எண்.57, சர்வே எண்.293/28 பகுதி, பட்டா எண். 827/05-06 இன்படி டவுன் சர்வே எண்.10/2 இல் அடங்கிய M.P.N/T.N.I எண்.218/72, K எண்.6873/72, Che.Che.M-3, இன்படி அங்கீகாரம்பெற்ற மனை, சென்னை-600118, கொடுங்கையூர், கிருஷ்ணமூர்த்தி நகர், பாலகிருஷ்ணன் தெரு, மனை எண்.41 பகுதியின் வடபுறம், கதவு எண்.41A, இல் அமைந்துள்ள கட்டுப்பரப்பளவு 1199.25சதுர அடி விஸ்தீரணங்கொண்ட நிலம் மற்றும் கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, எல்லைகள்: வடக்கில் மனை எண்.40; தெற்கில் மனை எண்.41 இன் தென்புறம்; கிழக்கில் சர்வே எண்.295/2; மேற்கில் பாலகிருஷ்ணன் தெரு; நாற்புறப்புகள்: வடக்குத் தெற்காக கிழக்குபுறம் 21 அடி; வடக்குத் தெற்காக மேற்குபுறம் 20 அடி; கிழக்கு மேற்காக வடபுறம் 59 அடி; கிழக்கு மேற்காக தென்புறம் 58 அடி.

தேதி : 22.09.2026 அதிகாரபூர்வ அதிகாரி மற்றும் முதன்மை மேலாளர்,
இடம் : சென்னை பஞ்சாப் நேஷனல் வங்கி, பிணையக் கடன் வழங்கிய வங்கி

கனரா வங்கி
சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II, சென்னை [7901]
எண்.9 & 10, சர் தியாகராய சாலை,
தியாகராய நகர், சென்னை-17
தொலைபேசி எண். 9740145622
மின்னஞ்சல் : cb7901@canarabank.com

பொது ஏல விற்பனை அறிவிப்பு

பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்களுக்கு மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு, குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் கீழே விவரிக்கப்பட்ட வங்கியில் பிணையம் வைத்துள்ள அசையும் சொத்துக்கள் மற்றும் கடன் வழங்கிய வங்கிக்கு கடனுக்காக ஈடுசெய்யப்பட்டுள்ள அசையும் சொத்துக்களை எங்கள் **பூந்தமல்லி கிளையில்** இருந்த **M/s.Brook Food & Beverages நிறுவனத்தின், பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திரு. ஸ்ரீராமன் முனிரத்தினம்** அவர்களின் கடன் கணக்கு, **சென்னை, சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II-க்கு** மாற்றப்பட்டுள்ளது. **18.10.2025** அன்று **NPA** ஆக மாறியுள்ளது. கடனாளர் வங்கியிடமிருந்து கடன் பெற்று வாங்கிய இயந்திரங்கள் மீது வங்கிக்கு உரிமை (charge) உருவாக்கும் வகையில், **20.11.2024** தேதியிட்ட கடன் ஆவணம் / பிணையம் (Hypothecation) ஒப்பந்தத்தை வங்கியுடன் நிறைவேற்றியுள்ளார்.

கிளை: சென்னை, சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II ; கடன்தாரர் பெயர் & முகவரி: **M/s.Brook Food & Beverages உரிமையாளர் திரு.ஸ்ரீராமன் முனிரத்தினம்** எண்.7/77, அன்னை அஞ்சம் நகர், 61-நந்தம்பாக்கம், குன்றத்தூர் சென்னை-600069. **மேலும் ஒரு முகவரி:** S.எண்.73, மனை எண்.86, ஸ்ரீ சரவண நகர், முதல் தெரு, மூன்றாம் கட்டளை, குன்றத்தூர், சென்னை-600069. **திரு.ஸ்ரீராம் முனிரத்தினம்,** த/பெ.முனிரத்தினம், எண்.48, தரைத்தளம், சித்தர் கோயில் தெரு, கோவிந்தராஜ் நகர், படூர், மாங்காடு, காஞ்சிபுரம்-600122. **மேலும் ஒரு முகவரி:** மனை எண்.15, சுப்ரமணியபுரம் மனைப்பிரிவு, குன்றத்தூர், சென்னை-600 069.

கடன் நிலுவைத் தொகை: 18/09/2026 அன்றுள்ளபடி ரூ.1,12,64,352.77 அதனுடன், வங்கியால் ஏற்பட்டுள்ள மேலும் வட்டி மற்றும் பிற தற்செயல் செலவுகளும்.

P & M சொத்தின் விவரங்கள்:
M/s. Brook Food & Beverages, சர்வே எண்.73, மனை எண்.86, ஸ்ரீ சரவணா நகர், 1வது தெரு, மூன்றாம் கட்டளை, குன்றத்தூர், சென்னை- 600069இல் உள்ள அடமானமாக வைக்கப்பட்டுள்ள அனைத்து இயந்திரங்களும், (Single Lot)

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 1,04,65,000/- டேவணித்தொகை ₹ 10,46,500/- ஏலஉயர்வுத்தொகை ₹ 50,000/-

சொத்தினை பார்வையிடும் தேதி : 08.10.2026 நேரம் காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை

டேவணித் தொகை செலுத்த கடைசி தேதி: விருப்பமுள்ள ஏலதாரர் குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% EMD டேவணித் தொகையினை M/s PSB Alliance Private Limited (baanknet) இன் இணையதளத்தில் நேரடியாக 12.10.2026, அன்று மாலை 5 மணிக்குள் செலுத்த வேண்டும்.

மின் ஏல தேதி மற்றும் நேரம் **13.10.2026** காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை (5 நிமிட காலநீட்டிப்புடன் தொடர்ந்து நடைபெறும்)

மின் ஏலம் பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கனரா வங்கியின் இணையதளத்தில் (www.canarabank.com) "E- Auction" இணைப்பில் தெரிந்து கொள்ளலாம் அல்லது கனரா வங்கி, சென்னை, சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II [7901], எண்.9 & 10, சர் தியாகராய சாலை, தியாகராய நகர், சென்னை-17, கைபேசி எண்.9740145622, மின்னஞ்சல் cb7901@canarabank.com மூலமாகவோ (அல்லது) (M/s PSB Alliance Pvt. Ltd), BAANKNET போர்டல், கைபேசி எண். 8291220220, மின்னஞ்சல் :support.BAANKNET@psballiance.com உதவி சேவை மையத்தை தொடர்பு கொள்ளலாம்.
Portal of E-Auction:**https://baanknet.com**

தேதி : 24.09.2026 அதிகாரபூர்வ அதிகாரி,
இடம் : சென்னை கனரா வங்கி

SBI பாரத ஸ்டேட் வங்கி
ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை
2வது தளம், செஞ்சிலுவைக் கட்டிடம், # 32,
செஞ்சிலுவைச் சாலை, எழும்பூர், சென்னை 600008
Ph: 044-28881037. E-mail: sbi.05170@sbi.co.in

அதிகாரபூர்வ அலுவலர் விவரம்: திரு. பார்த்தசாரதி.C, மொபைல் எண்.: 9444719444 / 044-28881034
நகர வழக்கு அதிகாரியின் பெயர் : திருமதி. K. அனுபமா, மொபைல் எண்.: 6369672894 / 044-28881053

அசையா சொத்தின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு.

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(6) ஷரத்துகள் படி அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின்ஏல விற்பனை அறிவிப்பு.

கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில் கீழே விரிவாக விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை அதிகாரப்பூர்வ அதிகாரி, பாரத ஸ்டேட் வங்கி, அவர்களால் சுவாதீனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. **சென்னை, பாரத ஸ்டேட் வங்கி, ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளைக்கு** கீழே விவரிக்கப்பட்டுள்ள கடன்தாரர்(கள்)/ஜாமீன்தாரர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய பாக்கித்தொகையினை வசூலிக்கும் பொருட்டும் சொத்தானது **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு" மற்றும் "என்ன உள்ளதோ அப்படியே"** எனும் அடிப்படையில் கீழே குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யப்படவிருக்கிறது.

கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி : 1. திருமதி. G.ஹேமலதா, த/பெ. திரு. J. கோபிநாதன், எண்.160/121, லேக்வியூ சாலை, மேற்கு மாம்பலம், சென்னை-600033. **மேலும் ஓர் முகவரி:** 5/58, 2வது குறுக்குத் தெரு, புதிய பாலாஜி நகர், சேலையூர், சென்னை-600073. **மேலும் ஓர் முகவரி:** ஃப்ளாட் எண்.C103, முதல் தளம், பிளாக் எண். D, "Vijay Raja's Ideal Homes Apartment", மனை எண்கள்: 223, 224, 225, 226, 227, 228, 229, 230, 231 & 232, ஐடியல் ஹோம் காலனி, கூடப்பாக்கம் கிராமம், திருவள்ளூர் மாவட்டம், சென்னை-600124. **2.திரு. S.நாகராஜன்,** எண்.160/121, லேக்வியூ சாலை, மேற்கு மாம்பலம், சென்னை-600033. **மேலும் ஓர் முகவரி:** ஃப்ளாட் எண்.C103, முதல் தளம், பிளாக் எண். D, "Vijay Raja's Ideal Homes Apartment", மனை எண்கள்: 223, 224, 225, 226, 227, 228, 229, 230, 231 & 232, ஐடியல் ஹோம் காலனி, கூடப்பாக்கம் கிராமம், திருவள்ளூர் மாவட்டம், சென்னை-600124. **மேலும் ஓர் முகவரி:** மேலாளர் HR, Excellence Mobile Tech India Pvt Ltd, NP-11, அபிவிருத்தி மனை, தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-600032.

நிலுவைத் தொகை: 24.09.2026 அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையான **ரூ. 34,07,193/-** (ரூபாய் முப்பத்து நான்கு லட்சத்து ஏழாயிரத்து நூற்று தொண்ணூற்று மூன்று மட்டும்) அதனுடன் எதிர்கால வட்டி மற்றும் அனைத்து இதர செலவினங்கள்.
சுவாதீன நிலை : மெய்நிலை சுவாதீனம்

அசையா சொத்துக்களின் விபரம்: முதன்மை பிணையம்: சொத்து: கூடப்பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள **27.10.2017** தேதியிட்ட ஆவண எண்.10152/2017 இன்படி திருமதி. ஹேமலதா.G மற்றும் திரு. நாகராஜன்.S ஆகியோருக்குச் சொந்தமான நிலம் அதனுடன், **VIJAY RAJA'S IDEAL HOMES** என்ற பெயரில் உள்ள குடியிருப்பு அபார்ட்மெண்ட்டின் முதல் தளத்தில் **751சதுர அடி சூப்பர் கட்டிடப்பரப்பு** கொண்ட **ஃப்ளாட் எண்:C103.** அட்டவணை "A": தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் ஆவடி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், கூடப்பாக்கம் கிராமம் பட்டா எண்.445 இன்படி பழைய சர்வே எண்.277/1C, பட்டா எண்கள்.1994, 1980, 1983, 1982, 1995, 1981, 1999, 1998, 1997 & 1996 ஆகியவற்றின்படி புதிய சர்வே எண்கள்.277/96, 277/88, 277/91, 277/90, 277/97, 277/89, 277/101, 277/100, 277/99 & 277/98 இல் அடங்கிய எண் L.P/D.T.C.P எண் 495/95 இன்படி அங்கீகாரம் பெற்ற மனைப்பிரிவு ஐடியல் ஹோம் காலனி மற்றும் 31.08.2016 தேதியிட்ட கட்டிடத் திட்ட அனுமதி எண்.02/2016 இல் அடங்கிய மனை எண்கள். 223,224,225,226,227,228,229,230,231 & 232 இல் அமைந்துள்ள 16500 ச.அடி விஸ்தீரணமுள்ள காலி நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. **எல்லைகள்:** வடக்கில்: மனை எண்.222 & 233; தெற்கில்: 40அடி அகல சாலை; கிழக்கில்: 23அடி அகல சாலை; மேற்கில்: 30அடி அகல சாலை; அட்டவணை "B" அட்டவணை "A" சொத்தின் பாகத்தில் உருவானதில் பிரிக்கப்படாத பங்கு 366ச.அடி நிலம். அட்டவணை "C" அட்டவணை-B இல் "VIJAY RAJA'S IDEAL HOMES", என்ற பெயரில் உள்ள திட்டத்தின் 751ச.அடி சூப்பர் கட்டிடப் பரப்பு கொண்ட ஃப்ளாட் எண்.C103. ஃப்ளாட்டின் **எல்லைகள்:** வடக்கில்: ஃப்ளாட் எண்.C102; தெற்கில்: ஃப்ளாட் எண்.C104; கிழக்கில்: 23அடி சாலை; மேற்கில்: தாழ்வாரம். **Latitude:13.090143N, Longitude:79.999640E**

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 25,00,000/- டேவணித் தொகை ₹ 2,50,000/- ஏல உயர்வுத் தொகை ₹ 10,000/-

சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: **09.10.2026 & 15.10.2026** - நேரம்: காலை 11 முதல் பிற்பகல் 1 வரை

வங்கிக்குத் தெரிந்தவரை சொத்துக்களுக்கு வில்லங்கங்கள் ஏதுமில்லை

மின் ஏலத் தேதி & நேரம்: **22.10.2026** நேரம்: காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை (தலா 10 நிமிடங்கள் கொண்ட கால நீட்டிப்புகள் தொடர்ந்து தரப்படும்).

விருப்பமுள்ள ஏலதாரர்கள், https://BAANKNET.com உடன் முன் ஏல டேவணித் தொகையை மின்னணு ஏல முடிவு வரை செலுத்தவும்.

விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://baanknet.com/eauction என்ற இணைப்பில் காணலாம்.

இடம்: சென்னை அதிகாரப்பூர்வ அலுவலர்,
தேதி: 24.09.2026 பாரத ஸ்டேட் வங்கி, SARB, சென்னை